(ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புதானே? நாளைக்கு அரசிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், எழுந்து பேசுங்கள். பரிதி, உட்காருங்கள். பேரவைத் தலைவரால் அழைக்கப்படுகிறவர்தான் பேசவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள்.

திரு.பரிதி இளம்வழுதி: அப்போது முன் வரிசையில் இருப்பவர்களைத்தான் நீங்கள் அழைப்பீர்களா? எங்களை அழைக்க மாட்டீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன் வரிசையில்தான் பேராசிரியர் அவர்கள் இருக்கிறார்கள். திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. பரிதி இளம்வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே....

திரு. துரைமுருகன்: சார். இரண்டு பேருமே பேசமுடியாது. என்னை இக்கட்டிலே மாட்டிவிடாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஆரம்பியுங்கள். உங்களை அழைத்திருக்கிறேன், நீங்கள் பேசுங்கள். பரிதி இளம்வழுதி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அடுத்து பேசுகிறீர்கள் என்றால் அழைக்கிறேன். பரிதி இளம்வழுதி, நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: நீங்கள் பேசச் சொன்னால் பேசுகிறேன். என்னை இக்கட்டிலே மாட்டிவிடுகிறீர்கள்.

(இ) சட்டமன்ற நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

திரு. பரிதி இளம்வழுதி: சார், நான் point of order கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய point of order என்ன? அதைச் சொல்லுங்கள்.

2001 ஆகஸ்ட் 24]

திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரின்போது, இறுதி நாளுக்கு முதல் நாள், நான் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்டேன். அவரும் அதற்குப் பதில் அளித்தார்கள். சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடியாக, பொது மக்கள் பார்ப்பதற்காக இங்கே T.V. Camera-க்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன; மற்ற மாநிலங்களில் நடத்துவதைப்போல இங்கே நடத்துகிறோம் என்று அவர்களும் பதில் சொன்னார்கள். சொல்லிவிட்டு, இரண்டு நாட்களாக Films Division எடுக்கிற அந்தக் காட்சியை தங்கள் வசதிக்கேற்ப edit செய்து, அதை மற்றத் தொலைக்காட்சிகளுக்குக் கொடுக்கிறார்கள். அன்று நான் கேட்டபோது, எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Edit செய்கிற வேலையெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. Edit செய்கிற வேலையெல்லாம் யார் செய்வார்கள் என்று தெரியும், உட்காருங்கள்.

3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2001–2002* ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீது விவாதம். திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நடப்பு நிதியாண்டிற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்வதற்காக வாய்ப்புத் தந்ததற்காக, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, ஒரு 5 ஆண்டு காலம் ஆட்சியிலே இல்லாமல் இருந்து, ஆட்சிக்கு வருகிற ஒரு கட்சி முதல் நிதிநிலை அறிக்கையை அளிக்கிறபோது, அளிப்பவர்களுக்கும் ஓர் உற்சாகம் இருக்கும்; மக்களிடத்திலும் ஒரு பரபரப்பு இருக்கும், என்னென்ன சலுகைகள் இருக்குமோ, என்னென்ன விஷயங்கள் இருக்குமோ என்று. படித்துப் பார்த்தால், புதிய தொழில்களுக்கு பல யுக்திகளைக் கையாண்டிருப்பார்கள்; இளைய சமுதாயத்தினருக்குப் புதிய வழிமுறைகளைக் காட்டியிருப்பார்கள்; வறுமை ஒழிப்பிற்கும், வளமான சமூக அமைப்பிற்கும் பலவிதமான புதிய திட்டங்கள், நிதிநிலை அறிக்கையிலே இருக்கும்; பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பலமான நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கும்; இப்படிப் பல்வேறுபட்ட கண்கவர் கதம்ப